IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 77/2021

Deposition of Witness : DW 1

Name : அண்ணாதுரை (வயது – 62)

Father's Name /W/o : த/பெ ஏழுமலை

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : களத்தூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 20.08.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் என் நிரூபண வாக்கு மூலத்தில் என் தந்தை ஏழுமலை பெயரில் தான் முத்திரைத்தாள் வாங்கப்பட்டது என்று நான் தெரிவித்துள்ளது தவறு என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 6 இல் ஏழுமலை என்று என் தந்தை பெயர் உள்ளதா என்றால் இல்லை 1956 ஆண்டிற்கான பத்திரத்தில் தான் உள்ளது. 1956 ஆவண முத்திரைத்தாளில் என் தந்தை எழுமலை பெயர் உள்ளது என்று நான் இந்நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. 2 ஆம் வாதி தந்தை எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2 ஆம் வாதி மற்றும் என் தந்தை கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார் என்று என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் பாஞ்சாலை மற்றும் ஆறுமுகம் இறந்த பிறகு 2 ஆம் வாதியை என் தந்தை பராமரித்து வந்தார்.

3. மேற்படி விபரத்தை தேதியுடன் நிரூபண வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. எத்தனை வருடமாக 2 ஆம் வாதி என் தந்தை பராமரிப்பில் இருந்தார்கள் என் பிரமாண பத்திரத்தில் தெரிவிக்கவில்லை என்றால் எவ்வளவு வருடமாக வளர்த்தார்கள் என்ற விபரம் எனக்கு சரியாக தெரியவில்லை. 2 ஆம் வாதி என் தந்தையின் பராமரிப்பில் இருந்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன் 2 ஆம் வாதிக்கு திருமணம் நடைபெறும் வரை என் தந்தையின் பராமரிப்பில் தான் இருந்தார்.

4. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 5 2 ஆம் வாதியின் திருமண பத்திரிக்கை என்றால் சரிதான். எந்த தேதியில் 2 ஆம் வாதிக்கு திருமணம் நடைபெற்றது என்றால் 04.06.1971 தேதியில் நடைபெற்றது. அப்போது எனக்கு 9 வயதுதான் இருந்திருக்கும் என்றால் இருந்திருக்கலாம். ஏகநாதனுக்கு திருமணம் நடைபெறும் போது அவரின் தாயார் இருந்தாரா என்றால் இல்லை அவர்கள் இறந்த பிறகு தான் என் தந்தை ஏகநாதனை வளர்த்தார்கள்.

5. ஏகநாதனின் தாயார் மற்றும் தந்தை இறந்த பிறகு அவரின் தாய்மாமா முனுசாமி என்பவர் தான் அவரை வளர்த்தார்கள் என்றாலும் என் தந்தை வளர்த்தார்கள் என்று நான் தெரிவித்தது பொய் என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ – 5 திருமண அழைப்பிதழில் என் தந்தை பெயர் குறிப்பிட்டுருக்கும் ஒரே காரணத்தினார் என் தந்தை 2 ஆம் வாதியை வளர்த்தார்கள் என்று தெரிவிக்க முடியாது என்றால் சரியல்ல. என் தந்தை 2 ஆம் வாதியை வளர்த்தார்கள் என்று உறுதி செய்வதற்கு எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தந்தைதான் 2 ஆம் வாதிக்கு திருமணம் நடத்தி வைத்தார்கள் அதற்கான ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

6. என் தந்தை என்ன வேலை செய்து வந்தார் என்றால் விவசாயம் செய்து வந்தார்.எப்போதிலிருந்து என் தந்தை விவசாயம் செய்து வந்தார் என்றால் எனக்கு 15 வயதிற்கு முன்பிலிருந்து அவர் விவசாயம் செய்து கொண்டிருந்தார் அதன் பிறகு நானும் அவருடன் சேர்ந்து விவசாயம் செய்தேன்.

7. என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் தந்தையின் வாரிசு சான்றிதழ் மற்றும் அவரின் வாரிசு சான்றிதழ் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான் வாங்கவில்லை வாதிகள் எவ்வாறு வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. ஏழுமலையின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ – 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏழுமலையின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ – 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் பொது ஆவணங்கள் என்பதால் வாதி மனு அளித்து வாங்கினார்கள் என்றால் தெரியாது.